**புதுச்சேரி அரசு**
**வேளாண்துறை**

**<u>புதுவை யூனியன் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கரும்பு நாற்றாங்கால் பயிர் செய்துள்ள விவசாயிகளின் கவனத்திற்கு</u>**

விவசாயிகள் பயிரிட்டுள்ள பதிவு பெற்ற கரும்பு நாற்றாங்கால் பயிரிலிருந்து சர்க்கரை ஆலைகளின் அனுமதி சீட்டின் பேரில் **2010-11** ஆம் ஆண்டு அறவைப்பருவத்தின் நடவு கரும்புக்காக வழங்கும் விதைக்கரணைகளின் நாற்றாங்கால் மானியம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டர் நடவுக்கு விதைக்கரணைகள் வழங்கும் விவசாயிகளுக்கு ரூ.4000/-ம் மானியமாக வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்ப படிவங்களை கூடுதல் வேளாண் இயக்குநர் பயிற்சி வழி தொடர்பு திட்டம், தட்டாஞ்சாவடி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை விதைக்கரணைகள் வழங்கப்பட்ட விவரங்களுக்கான சர்க்கரை ஆலையின் ரசீது மற்றும் கரும்பு அதிகாரிகளின் சான்றிதழ்களுடன், கூடுதல் வேளாண் இயக்குநர் பயிற்சி வழி தொடர்புதிட்டம் தட்டாஞ்சாவடி அலுவலகத்தில் **30-06-2011**-க்குள் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் வேளாண் இயக்குநர்
பயிற்சி வழி தொடர்பு திட்டம்
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9.